Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.72/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW3** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | தஸ்மியா பானு |
| Husband Name | : | முகம்மது அப்பாஸ் |
| Village | : | ஆத்துக்கரை, நம்புதாளை |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | இல்லத்தரசி |
| Religion | : | |
| Age | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா தொண்டி காவல் நிலையத்திற்குட்பட்ட நம்புதாளை ஆத்தங்கரையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என் அக்கா செய்யதலி பாத்திமாவின் கணவர். அ.சா.1, 2 சாட்சிகளையும், வழக்கில் இறந்துபோன அ.சா.1 ன் மகன் முகம்மது அபுபக்கரையும் தெரியும். எனதுஅக்கா செய்யதலி பாத்திமா எனது வீட்டின் அருகில் சீமாட்டி பால் என்பவரது வீட்டில் வாடகைக்கு பிள்ளைகளுடன் குடியிருந்து வந்தார். என் அக்காவிற்கும், அவரது கணவரான எதிரிக்கும் அடிக்கடி சண்டை வருவதால் அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்ததால் என் அக்கா என் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் வாடகைக்கு குடிவந்தார். கடந்த 30.06.2024 – 01.07.2024 ம் தேதி இரவில் சுமார் 11.30 மணியளவில் நான் இயற்கை உபாதை

கழிக்க பாத்ரூமுக்கு சென்றேன். அப்போது இரண்டு ஆண்குரல்கள் பேசிக்கொண்டிருந்தது எனக்கு கேட்டது. அந்த சமயத்தில் பெண் குரல் எதுவும் கேட்கவில்லை. பேசிக்கொண்டவர்கள் இருவரும் ஆண்கள். அதில் ஒரு குரல் என் அக்காவின் கணவரான ஆஜர் எதிரியினுடையது, மற்றொரு குரல் அப்போது யாருடையது என்று எனக்கு தெரியாது. பேசிக்கொண்டிருந்ததை நான் காதால்தான் கேட்டேன். எதிரியுடன் பேசிக்கொண்டிருந்த மற்றொரு நபர் யார் என்று நான் பார்க்கவில்லை. எதிரியும் அந்த நபரும் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரி உன்னை என் மாமி பையன் என்றுதானே வீட்டிற்குள் விட்டேன் என்று சொன்னார், அதற்கு மற்றொரு நபர் உன் தம்பி புர்கான் எங்கே என்று கேட்டான். அதற்கு எதிரி அந்த நபரிடம் நான் என்ன கேட்கிறேன், நீ என்ன கேட்கிறாய் என்று சொன்னார். அவர்கள் இருவரும் பேசி தானே கொண்டிருக்கிறார்கள் என்று நான் இயற்கை உபாதை கழித்துவிட்டு வீட்டிற்குள் சென்றுவிட்டேன். 10 நிமிடங்கள் கழித்து யாரோ கதவை தட்டினார்கள், என் அப்பா சென்று கதவை திறந்தார், அப்போது எதிரி என் அப்பாவிடம் தீப்பெட்டி கேட்டார், என் அப்பா தீப்பெட்டி கொடுத்துவிட்டு இந்த நேரத்தில் வந்து கேட்கிறான் என்று திட்டிக்கொண்டே வந்து படுத்தார். அதனால் தீப்பெட்டி கேட்டது எதிரிதான் என்று எனக்கு தெரியும். நான் தூங்கிவிட்டேன். மறுநாள் காலை 09.00 மணியளவில் என் அக்கா செய்யதலி பாத்திமா அலறிக்கொண்டே வந்தார். வீட்டிற்குள் யாரோ இறந்து கிடக்கிறார்கள் என்று சொன்னார். என் அக்கா மற்றும் பிள்ளைகள் அவர்கள் வசித்த வீட்டில் அன்று இருந்தார்களா என்றால் 30.06.2024 ம் தேதி மாலை 04.00 மணியளவில் என் அக்காவை பார்த்தேன், அதற்கு பின்பு பார்க்கவில்லை. நான் போய் பார்த்தபோது முகம் சிதைந்து இருந்தது. முகம்மது அபுபக்கர் வீட்டில் அவரது அப்பா அழுதுகொண்டே வந்தார், அப்போதுதான் இறந்துகிடந்தது முகம்மது அபுபக்கர் என்று தெரிந்து கொண்டேன். நான் என் அக்கா வாடகைக்கு இருந்து வந்த வீட்டின் உரிமையாளர் சீமாட்டி பாலுவிடம் உங்கள் வீட்டில் ஒரு நபர் இறந்து கிடப்பதாக தகவல் சொன்னேன். காலை 09.10 மணியளவில் போலிசார்

முகம்மது அபுபக்கர் இறந்துகிடந்த வீட்டிற்கு வந்தார்கள். என்னை விசாரித்தார்கள், விசாரித்தபோது நான் இதற்கு முன்பு சொன்ன விவரத்தை போலிசாரிடம் சொன்னேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.72/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | முகம்மது இஸ்மாயில் |
| Father/Husband Name | : | சிராஜீதீன் |
| Village | : | மேலத்தெரு, நம்புதாளை, தொண்டி |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | காய்கறி வியாபாரம் |
| Religion | : | |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா தொண்டி காவல் நிலையத்திற்குட்பட்ட நம்புதாளை மேலத்தெருவில் வசித்து வருகிறேன். காய்கறி வியாபாரம் டாடாஏசி வண்டியில் வைத்து ஊர்ஊராக சென்று தொழில் செய்து வருகிறேன். இந்த வழககில் இறந்துபோன முகம்மது அபுபக்கர் என் தம்பி. அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். இரண்டு தெருதள்ளி எங்கள் ஊரில் வசிக்கிறார். கடந்த 30.06.2024 ம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல் வீட்டிலிருந்து வெளியே போனார். அப்போது நான் உட்பட எங்கள் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் இருந்தோம். வெளியில் சென்ற என் தம்பி முகம்மது அபுபக்கர் இரவு வீட்டிற்கு திரும்பவில்லை. என் தம்பிக்கு திருமணம் ஆகவில்லை. காலையில் ஒருநபர் செய்யதலி பாத்திமா வீட்டு காம்பவுண்டுக்குள் இறந்துகிடப்பதாக தகவல்

சொன்னார்கள். உடனே நானும், என் அப்பாவும் ஊர்க்காரர்கள் சொன்ன செய்யதலி பாத்திமா வீட்டிற்கு சென்றோம். அங்கு சென்று பார்க்கும்போது என் தம்பி முகம் சிதைந்து இறந்துகிடந்தான். உடனே நானும், என் அப்பாவும் தொண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என் தம்பிக்கும், எதிரிக்கும் ஏதாவது முன்விரோதம் இருந்ததா என்றால் எதிரியின் மனைவியுடன் என் தம்பி தவறான உறவில் இருந்ததாக எதிரி ஊரில் சொல்லிக்கொண்டு வந்துள்ளார். என் தம்பி எதிரியின் வீட்டில் இறந்துகிடந்ததாலும, ஏற்கனவே எதிரியின் மனைவியுடன் தவறான உறவில் இருப்பதாக ஊரில் சொல்லிக்கொண்டு வந்ததால் எதிரி கொலை செய்திருக்கலாம் என்று சொன்னோம், போலிசாரும் எதிரியை பிடித்து விசாரித்தபோது அவர்தான் என் தம்பியை கொலை செய்ததாக போலிசாரிடம் சொன்னதாக போலிசார் எங்களிடம் சொன்னார்கள். என் தம்பியின் முகத்தில் குலவிக்கல்லைப் போட்டு கொன்றதாக எதிரி சொன்னதாக போலிசார் எங்களிடம் சொன்னார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C.72/2025** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosection – **PW1** | |
| Deposition of witness for | } | Defence – | |
| | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | சிராஜீதீன் |
| Father/Husband Name | : | அப்துல் வாகிது |
| Village | : | மேலத்தெரு, நம்புதாளை, தொண்டி |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | டீக்கடை |
| Religion | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா தொண்டி காவல் நிலையத்திற்குட்பட்ட நம்புதாளை மேலத்தெருவில் வசித்து வருகிறேன். டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழககில் இறந்துபோன முகம்மது அபுபக்கர் எனது இரண்டாவது மகன். ஆஜர் எதிரியை தெரியும். இரண்டு தெருதள்ளி எங்கள் ஊரில் வசிக்கிறார். என் மகன் முகம்மது அபுபக்கர் சென்னையில் ஒரு ரெஸ்டாரண்டில் வேலை பார்த்தார். கடந்த 2024ம் வருடம் பக்ரீத்துக்காக பக்ரீத் நாளன்று காலை 05.00 மணியளவில் வீட்டிற்கு வந்தார். கடந்த 30.06.2024ம் தேதி நான் கடையை அடைத்துவிட்டு இரவு 09.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது நான் என் மகன் அபுபக்கர் சிக்கன் ரைஸ் கேட்டார், நான் கடையை அடைத்து வரும்போதே வாங்கிக்கொண்டு வந்தேன். சிக்கன் ரைசை

எடுத்துகொண்டு அன்று இரவு 10.00 மணி இருக்கும், என் மகன் வெளியே சென்று சாப்பிட்டுவிட்டு வருவதாக சென்றான். வெளியே சென்ற என் மகன் வீட்டிற்கு வரவில்லை. காலையில்எழுத்தவுடன் எங்கள் ஊர் வடக்கே உள்ள ஆற்றுப்பக்கம் ஒரு நபர் இறந்துகிடப்பதாக அக்கம்பக்கம் இருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நானும், என் பெரிய மகன் இஸ்மாயிலும் பைக்கை எடுத்துக் கொண்டு அந்த ஆற்றுக்கரை பகுதிக்கு சென்றோம். ஆற்றுக்கரை பகுதியில் வசித்த செய்யதலி பாத்திமா அவரது வீட்டு காம்பவுண்டு அருகே சென்று பார்த்தபோது என் இளைய மகன் முகம்மது அபுபக்கர் முகம் சிதைந்தநிலையில் இறந்துகிடந்தார். நானும், என் மகன் முகம்மது இஸ்மாயிலும் உடனே தொண்டி காவல் நிலையம் சென்று, என் மகன் முகம்மது அபுபக்கர் அடையாளம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டு கிடப்பதாகவும், கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என் கையெழுத்து தான். அந்த புகாரை நான்தான் கைப்பட எழுதிக்கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ–1**. என் மகன் இறந்துகிடந்த வீடு எதிரியின் மனைவி வீடு என்பதால் எதிரியால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என எங்கள் சந்தேகத்தை போலிசாரிடம் சொன்னோம், அதனால் போலிசார் அன்று காலை 09.00 மணியளவில் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். எதிரியை விசாரித்தபோது அவர் தான் என் மகனை கொலை செய்ததாக ஒப்புக்கொண்டதாக போலிசார் என்னிடம் சொன்னார்கள். அதன் பிறகு என் மகனின் உடலை பிரேத பரிசோதனைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். அன்று மாலை 06.00 மணியளவில் பிரே பரிசோதனை செய்து என் மகனின் உடலை எங்களிடம் போலிசார் ஒப்படைத்தார்கள். ஆஜர் எதிரியும், என் மகனும் நண்பர்கள். ஆஜர் எதிரி என் மகனை அடிக்கடி மது அருந்த கூப்பிடுவார். என் மகன் எதிரி வீட்டிற்கு மது அருந்த செல்லும்போது என் மகனுக்கும், எதிரியின் மனைவிக்கும் தவறான பழக்கம் ஏற்பட்டது. அதன் அடிப்படையில்தான் எதிரியின் வீட்டுக்கு சென்ற

என் மகனை எதிரிக குலவிக்கல்லால் போட்டு கொலை செய்துள்ளதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.